# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8082804

C

1. District மாவட்டம் : Coimbatore PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 01/2024/AC/CB Date: நாள் 23.01.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7, 7 r/w 12
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Monday Date from : நாள் முதல் 22.01.2024 Date to : நாள் வரை 23.01.2024
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.00 hrs Time to : நேரம் வரை 08.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.01.2024 Time : நேரம் 15.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD VOL-I Time : நேரம் 15.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் About 30 km North-East.
   Beat Number : முறைக் காவல் எண் - (b) Address : முகவரி Office of the Sub-Registrar, Annur, Coimbatore District
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. R. Rajendran (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Inspection Cell Inspector (g) Address : முகவரி O/o. Inspection cell office, Collectorate Campus, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) Tr. R. Selvabalamurugan, Sub-Registrar, Annur, Coimbatore.
   (2) Tr. P. Prabhu, S/o. Pothiran, No.27, Kamaraj colony, Nagamapudur, Annur, Coimbatore
   (3) Tr. M. Mari, S/o. Murugan, D.No. 6A, Periya kottai, M.M.Kovilur, Dindigul.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted

Separate sheets herewith enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Int. C. LATHA Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, Coimbatore on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant [signature] 23/1/2024
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station [signature] 23/01/2024
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 23.01.2024 @ 16.30 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. Ezhilarasi
Rank: நிலை Inspector of Police,
Vigilance and anti-Corruption
Coimbatore
23.01.2024.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

**Continuation of the FIR in Coimbatore V&AC Cr.No.01/2024/AC/CB u/s. 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018.**

இன்று 23.01.2024-ம் தேதி 14.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.ரா.ராஜேந்திரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 01/2024/AC/CB u/s. 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ஆக 15.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அந்த புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், திரு.ரா.ராஜேந்திரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண். 016/2024/ஐ2, நாள்: 23.01.2024 அம்மா, பொருள்: திடீர் தணிக்கை - கோவை மாவட்டம்- சார்பதிவாளர் அலுவலகம், அன்னூர், கோயம்புத்தூர்- திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக. 22.01.2024-ம் தேதி 15.30 மணிக்கு, கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் C.S.R நகரில் அமைந்துள்ள அன்னூர் சார்-பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வரும் திரு.செல்வபாலமுருகன் என்பவர், மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்வதற்கும், வில்லங்க சான்று பெறுவதற்கும் வருகை தரும் பொதுமக்களிடமிருந்தும் பத்திர எழுத்தர்களிடமிருந்தும் நேரடியாகவும் மறைமுகமாகவும் மற்றும் அவ்வலுவலகத்தில் தினக்கூலியாக வேலை செய்யும் தனிநபரான திரு.பிரபு என்பவர் மூலமாக கையூட்டு பணம் பெற்று அப்பணத்தை சார்பதிவாளர் தினமும் வீட்டுக்கு போகும்போது, பயன்படுத்திவரும் அவரது சொந்த வாகனமான TN 47 BA 1545 என்ற பதிவெண்கொண்ட i20 காரின் ஓட்டுநரிடம் கொடுத்து, மேற்படி காரில் வைத்து வீட்டுக்கு எடுத்து சென்று

வருவதாக நம்பத்தகுந்த தகவல் கிடைக்கப்பெற்றது. அதனடிப்படையில் மேற்படி அலுவலகத்தை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், கோவை ஊ.த.க.ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினருடன் சுமார் 17.00 மணிமுதல் கண்காணிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்திற்கு அருகிலிருந்த பார்க்கில் TN 47 BA 1545 என்ற பதிவெண்கொண்ட i20 கார் நிறுத்தப்பட்டிருந்தது. அதனுள் அதன் டிரைவர் அமர்ந்திருந்தார். மேற்படி சார்பதிவாளர் அலுவலத்திலிருந்து அவ்வப்போது ஒரு நபர் வெளியே வந்து TN 40 T 0424 என்ற பதிவெண்கொண்ட Hero Pleasure என்ற சிவப்பு நிற இருசக்கர வாகனத்தில் அவ்வலுவகத்திற்கு அருகிலிருக்கும் பத்திர எழுத்தர்களின் அலுவலகங்களுக்கு சென்று பணம் வசூல் செய்துகொண்டிருந்தவர் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் எதிரே அமைந்துள்ள செரீப் என்பவரின் பத்திரஆபீசுக்கு சென்று சிறிது நேரத்தில் வெளியே வந்து மீண்டும் சார்பதிவாளர் அலுவலகத்தினுள் சென்றுவிட்டார். உடனே திடீர் தணிக்கை செய்யும்பொருட்டு ஆய்வுக்குழு ஆய்வாளர் காவல் குழுவினருடன் அன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தினுள் நுழைந்தபோது மேற்படி TN 40 T 0424 என்ற பதிவெண்கொண்ட Hero Pleasure என்ற சிவப்பு நிற இருசக்கர வாகனத்தில் சென்று பணம் வசூல் செய்த நபர் செல்போனில் பேசியபடி இவ்வலுவலகத்திலிருந்து வெளியே வந்தார். அவரை நிறுத்தி ஆய்வுக்குழு ஆய்வாளார் தன்னையும் தன்னுடன் வந்த ஊ.த.க. காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினரை அறிமுகப்படுத்திய பின்னர் இவ்வலுவலகத்திற்குள் அழைத்துவந்து அமரவைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து இவ்வலுவலகத்தின் மேற்குதிசையில், கிழக்கு பார்த்தவாறு அமந்திருந்தவரை விசாரிக்க அவர் தனது பெயர் செல்வபாலமுருகன் என்றும் தான் கடந்த 14.06.2023 முதல் இவ்வலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும், மேலும் இரண்டு உதவியாளர்கள், ஒரு இளநிலை உதவியாளர், ஒரு அலுவலக உதவியாளர், ஒரு கேமரா ஆப்ரேட்டர் மற்றும் இரண்டு Data Entry Operator-கள் ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர் என்றும் தெரிவித்தவரிடம் ஆய்வுக்குழு ஆய்வாளர் தன்னையும் தன்னுடன் வந்த கோவை ஊ.த.க. ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினரையும் அறிமுகப்படுத்தி திடீர் தணிக்கை செய்ய வந்துள்ள விபரம் தெரிவிக்கப்பட்டு,

திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இவ்வலுவலகத்திலிருந்த கணினி அறையில் சிலர் பணிசெய்துகொண்டிருந்தனர். பின்னர் இவ்வலுவலகத்தில் முன்னதாக அமரவைக்கப்பட்ட மேற்படி நபரை சார்பதிவாளர் முன்னிலையில் விசாரித்தபோது அவர் தனது பெயர் பிரபு என்றும் தான் அன்னூர் நாகம்மாபுதூர், காமராஜர் காலணியில் வசித்து வருவதாகவும் தெரிவித்தார். தான் பதிவுத்துறையில் 3 வருடங்களாக Data Entry Operator-ஆக வேலை பார்த்ததாகவும், பின்னர் அப்பணியை விட்டுவிட்டு கடந்த 2 வருடங்களாக இவ்வலுவலகத்தில் சின்ன சின்ன வேலைகளை செய்துவந்ததாகவும், பின்னர் தற்போது சார்பதிவாளராக பணிபுரியும் செல்வபாலமுருகன் இவ்வலுவலகத்திற்கு பணிமாறுதலாகி வந்தபின்பு அவர் சொல்லும் வேலைகளை செய்துவருவதாகவும் தெரிவித்தார். மேலும் சார்பதிவாளரது அறிவுரையின் பேரில் தினமும் இவ்வலுவலகத்திற்கு பத்திரபதிவினை மேற்கொள்ளும் பத்திரஎழுத்தாளர்களிடமிருந்து பத்திரம் பதிவு செய்வதற்கு பத்திரபதிவிற்கு தகுந்தாற்போல் கையூட்டாக பணம் வசூல் செய்து அந்த தொகைக்கான விபரத்தை தனியாக குறிப்பெழுதி அதனை சார்பதிவாளரிடம் காண்பித்து பின்னர் அவரது உத்தரவின்படி வசூல் செய்யப்பட்ட தொகையை சார்பதிவாளரின் வாகன ஓட்டுநரான திரு.மணி என்பவரிடம் ஒப்படைத்துவிடுவதாகவும் தெரிவித்தார். அதற்காக சம்பளமாக வாரா வாரம் ரூ.3000/- சார்பதிவாளர் திரு.செல்வபாலமுருகன் தனக்கு தருவாரெனவும் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து திரு.பிரபு என்பவரை சோதனையிட்டபோது அவர் தனது பேண்ட்பாக்கெட்டிலிருந்த பணம் மற்றும் குறிப்புகள் எழுதப்பட்ட இரண்டு வெள்ளை தாள்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனை பார்வையிட பணம் ரூ.3,400/- இருந்தது. அதைப்பற்றி விசாரிக்க அந்தப்பணம் தான் இணையதளம் மூலமாக வில்லங்க சான்று பெறுவதற்கும் நகல் எடுப்பதற்கும் உரிய கட்டணம் மற்றும் கமிஷன் தொகை எனத்தெரிவித்தார். எனவே அந்தப்பணமானது அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவர் வசம் வைத்திருந்த வெள்ளை தாள்களை பார்வையிட அதில் (i).வரிசை எண் 1 முதல் 116 வரையில் ஆவண எண் மற்றும் பெயர் விபரம் (ii).சிறிய துண்டு பேப்பரில் 22.01.2024 திங்கள் என்றும்,

அருணாசலம் (10) - 8500, A.M.S. (1) - 5000, சேகர் -9000, அன்பழகன் (1) - 1500, செரிப் (2) - 2000, சந்தோஷ் (1) - 1000, ராமலிங்கம் (5)-5000+1000, விஜயகுமார்(8)-8000, செல்லமுத்து(6)-3000, சதீஸ்-52000, கல்பனா(3)-3000, வினோத்(6)-6000, சேட்(1)-1000, ரங்கநாதன்(7)-7000, கோவை கணக்கு-17000 என்றவாறு கருப்பு பேனாவால் எழுதப்பட்டிருந்தது மற்றும் மேற்படி தாள்கள் குறித்து திரு.பிரபு என்பவரிடம் விசாரிக்க அதில் வரிசை எண் 1 முதல் 116 வரையிலான குறிப்புகள் எழுதப்பட்டிருந்த தாளானது 22.01.2024-ம் தேதியன்று பத்திரபதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விபரங்கள் என்றும் அதை இவ்வலுவலகத்தில் Data Entry Operator ஆக பணிபுரியும் சியாமளா என்பவரிடமிருந்து சரிபார்ப்பதற்காக பெறப்பட்டது என்றும் மற்றொரு துண்டுசீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் விபரங்கள் தன்னால் எழுதப்பட்டதென்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெயர்கள் பத்திரஎழுத்தர்களின் பெயர்கள் எனவும் அவரவருக்கு நேரே எழுதப்பட்ட தொகைகள் அனைத்தும் சார்பதிவாளர் அவர்கள், 22.01.2024-ம் தேதியில் பத்திரம் பதிவுசெய்து கொடுத்ததற்காக கையூட்டாக மேற்படி பத்திர எழுத்தர்களிடமிருந்து பெறப்பட்டதொகைகள் எனவும் அத்தொகைகளை சார்பதிவாளர் வீட்டிற்க்கு செல்லும்போது அவரிடம் கொடுப்பதற்காக இவ்வலுவலகத்திற்கு எதிரில் அமைந்துள்ள செரீப் என்பவரின் பத்திரஆபீசில் e-payment செய்யும் திரு.சதாம் உசேன் என்பவரிடம் சிறிது நேரம் கழித்து வாங்கிக்கொள்வதாக தெரிவித்து அவரது டேபிளின் மீது வைத்துவிட்டு, இவ்வலுவலகத்திற்குள் வந்ததாகவும், அந்தப்பணத்தை எடுத்து சார்பதிவாளர் திரு.செல்வபாலமுருகன் அவர்களின் அறிவுறுத்தியபடி அவரது வாகன ஓட்டுநர் திரு.மணியிடம் கொடுப்பதற்காக இவ்வலுகத்தைவிட்டு வெளியே வந்தபோதுதான் ஆய்வுக்குழு ஆய்வாளர் மற்றும் கோவை ஊ.த.க. ஆய்வாளர் ஆகியோர் தன்னை நிறுத்தி இவ்வலுவலகத்திற்குள் அழைத்துவந்தாகவும் தன்னை அழைத்துச்சென்றால், தான் சார்பதிவாளருக்காக பத்திர எழுத்தர்களிடமிருந்து கையூட்டாக வசூல்செய்த பணத்தை எடுத்து ஆஜர் செய்வதாக தெரிவித்தார். எனவே மேற்படி இரண்டு வெள்ளைத்தாள்களும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதுகுறித்து சார்பதிவாளர் திரு.செல்வபாலமுருகன் என்பவரை விசாரிக்க

மேற்படி பிரபு என்பவரை தான், இவ்வலுவலகத்தில் சிறுசிறு வேலைகளை செய்வதற்காக வேலைக்கு வைத்துள்ளதாகவும் அதற்காக வாரம் ரூ.3,000/- சம்பளம் கொடுத்துவருவதாகவும், அன்னூர் சார்பதிவாளர் அலுவலக பகுதிக்குட்பட்ட பத்திர எழுத்தர்களிடம் அன்றன்றைக்கு பதிவு செய்யப்படும் பத்திரங்களுக்கு அரசு கட்டணத்தை தவிர தனியாக தனக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை அந்தந்த பத்திர எழுத்தரிடம் தனது அறிவுரையின் படி மேற்படி பிரபு வசூல்செய்து அதற்கான கணக்கை தெரிவித்து தான் இவ்வலுவலகத்திற்கு வந்துபோக பயன்படுத்திவரும் TN 47 BA 1545 என்ற பதிவெண்கொண்ட தனது i20 காரின் டிரைவரான மணி என்பவரிடம் கொடுக்கச்சொல்லி அதை நான் வீட்டிற்கு போகும்போது எடுத்துச்செல்லும் விபரத்தை தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து பிரபுவால் வசூல்செய்யப்பட்டு இவ்வலுவலகத்திற்கு எதிரேயுள்ள செரீப்பின் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பணத்தை எடுத்துவர உடன்வரும்படி கேட்டுக்கொண்டபோது அவர் வரமறுத்துவிட்டார். எனவே ஆய்வுக்குழு ஆய்வாளர், ஊ.த.க. காவல் ஆய்வாளர், காவல் குழுவினர் மற்றும் திரு.பிரபுவுடன் இவ்வலுவலகத்திற்கு எதிரே அமைந்துள்ள செரீப் பத்திர ஆபீஸ், சந்தோஷ் பத்திர ஆபீஸ், சதாம் உசேன் இ-பேமெண்ட், விஸ்வநாதன் ஸ்டாம்ப் வெண்டர் என்ற அலுவலகத்திற்குள் சென்றபோது அங்கு கணினியின் முன்பு அமர்ந்திருந்த இரண்டு நபர்களை விசாரிக்க அவர்களில் ஒருவர் தனது பெயர் சதாம் உசேன் என்றும் மற்றொருவர் சந்தோஷ் என்றும் தெரிவித்தனர். அவர்களிடம் ஆய்வுக்குழு ஆய்வாளர் அவர்களால் அவரையும் அவருடன் வந்த குழுவினரையும் அறிமுகப்பத்திக்கொள்ளப்பட்டது. அப்போது பிரபு, அவ்வலுவலகத்தில் அமர்ந்திருந்த சதாம்உசேனை காணபித்து தான் வசூல் செய்த பணத்தை கொடுத்துவைத்த விபரத்தை தெரிவித்தார். அது குறித்து சதாம்உசேனை விசாரிக்க அவர், சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் பிரபு என்பவர் 22.01.2024-ம் தேதி இரவு 07.30 மணியளவில் தனது அலுவலகத்திற்கு வந்து மூன்று 500ரூபாய் நோட்டுக் கட்டுகளை கொடுத்துவிட்டு, அதில் ரூ.1,32,000/- உள்ளதெனவும், அதனை சார்பதிவாளர் திரு.செல்வபாலமுருகன் அவர்கள் வீட்டிற்கு புறப்படும்போது சார்பதிவாளரிடம்

கொடுக்கவேண்டுமெனவும், எனவே பின்னர் வந்து வாங்கிக்கொள்வதாக சொன்னதாகவும், அதன்படி தானும் அப்பணத்தை தனது டேபிளின் வலதுபுற டிராயரில் பத்திரமாக வைத்திருந்ததாகவும் அதுபற்றி தனக்க எதுவும் தெரியாதெனவும் தெரிவித்து அப்பணக் கற்றைகளை எடுத்து ஆஜர் செய்தார். ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் 264 X 500 என மொத்தம் ரூ.1,32,000/- இருந்தது. மேலும் சதாம் உசேனிடம் வேறு பணம் ஏதேனும் உள்ளதா என்று விசாரிக்க அவர் தனது பேண்ட் பாக்கெட்டிலும், டேபிள் டிராயரிலும் இருந்த பணம் ரூ.69,700/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதுகுறித்து விசாரிக்க மேற்படி தொகையானது தன்னிடம் வரும் வாடிக்கையாளர்களிடம் பத்திரப்பதிவிற்கான தொகையை e-Payment மூலம் செலுத்தியதற்காக வசூலிக்கப்பட்ட கட்டணம் எனத்தெரிவித்தார். அது குறித்த ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு மேற்படி பணம் ரூ.69,700/-ஐ திரு.சதாம் உசேனிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்த சந்தோஷ்குமார் என்பவரை விசாரிக்க அவர் தான் பத்திர எழுத்தராக பணிபுரிந்து வருவதாகவும், ஒவ்வொரு பத்திரப்பதிவிற்கும் ரூ.1,000/- மாமூலாக அன்னூர் சார்பதிவாளர் அவர்களுக்கு அளிக்கவேண்டுமெனவும், அதை சார்பதிவாளரிடம் வேலைபார்த்துவரும் பிரபு என்பவர் தன்னிடம் வந்து வசூல் செய்வது வழக்கம் என்றும், அதேபோல் 22.01.2024-ம் தேதியில் தான் ஒரு பத்திரத்தை பதிவு செய்ய கொடுத்ததற்காக ரூ.1,000/-ஐ அன்றைய தினம் மாலை சுமார் 6.30 மணியளவில் பிரபு வாங்கிச்சென்றதாகவும் தெரிவித்தார். மேலும் சதாம் உசேன் டேபிளுக்கு அருகில் இருந்த டேபிள் பற்றி விசாரிக்க செரீப் அவரது இருக்கை என்றும், அந்த டேபிள் டிராயரை பார்த்தபோது ரூ.5,000/- மற்றும் ரூ.1,150/- தனித்தனியாக காணப்பட்டது. எனவே திரு.செரீப் என்பவரை அலுவலகத்திற்கு வரும்படி தகவல் தெரிவிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்படி பணம் ரூ.1,32,000/- மற்றும் பிரபு, சந்தோஷ்குமார், சதாம் உசேன் ஆகியோருடன் இவ்வலுவலகம் வரப்பட்டது. பின்னர் மேற்படி பணம் குறித்து சார்பதிவாளரிடம் விசாரிக்க அவர் தனது அறிவுரையின் பேரில்தான் பிரபு அப்பணத்தை பத்திரபதிவாளர்களிடமிருந்து வாங்கிய விபரத்தை ஒப்புக்கொண்டபடியால் அப்பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் சார்பதிவாளர்

அவர்களிடம் பணம் குறித்து விசாரிக்க அவர் 22.01.2024-ம் தேதியில் ரூ.1,080/- கொண்டு வந்ததாகாக தெரிவித்து அவரிடமிருந்த ரூ.1,080/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து தனிநபர் பண இருப்பு பதிவேடானது ஒப்பிட்டு பார்க்கப்பட்டபின் அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, சார்பதிவாளரது சொந்த வாகனமான TN 47 BA 1545 என்ற பதிவெண்கொண்ட i20 காரிலிருந்த ஓட்டுநர் திரு.மணி என்பவரிடம் ஆய்வுக்குழுவினர் அவர்களை அறிமுகப்படுத்திக்கொண்ட பின் அவரை விசாரிப்பதற்காக இவ்வலுவலகத்திற்குள் அழைத்துவந்து அமர வைக்கப்பட்டது. அன்னூர் சார்-பதிவாளர் அலுவலகமானது அன்னூர் to அவினாசி சாலையின் வலது புறம் C.S.R நகரில் கிழக்கு பார்த்த நுழைவாயிலுடன் அமைந்துள்ளது. இவ்வலுவலகம் அரசுக்கு சொந்தமான இடத்தில் சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேலும் இவ்வலுவலகத்தில் கணினி அறையில் ஆஜரிலிருந்தவர்களை விசாரிக்க, அவர்களில் ஒருவர் தனது பெயர் செல்வராஜ் எனவும் தான் 26.07.2022 முதல் இவ்வலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், தான் இவ்வலுவலகத்தில் மதிப்பறிக்கை, பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை பதிவேற்றம் செய்வது, அலுவலக தபால்களை சரிபார்த்து பெறுவது மற்றும் அனுப்பி வைப்பது போன்ற பணிகளை மேற்கொள்வதாக தெரிவித்தார். அவரிடமிருந்த பணம் குறித்து விசாரிக்க தான் 22.01.2024-ம் தேதி அலுவலகம் வரும்பொழுது ரூ.1,100/- கொண்டு வந்ததாகவும், தனது சொந்த செலவுபோக தன்னிடமிருந்த மீதிப்பணம் ரூ.574/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் மற்றொரு உதவியாளர் திருமதி.செல்வி மற்றும் இளநிலை உதவியாளர் திருமதி.சந்தியா ஆகியோர் இன்று அலுவலகம் வந்து அவர்கள் மாலை 6 மணிக்கே வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து ஆஜரிலிருந்த அலுவலக உதவியாளர் திருமதி.விஜயலட்சுமி என்பவரை விசாரிக்க தான் 12.01.2024-ம் தேதி முதல் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், 22.01.2024-ம் தேதி அலுவலகம் வரும்பொழுது ரூ.620/- கொண்டு வந்ததாகவும், தனது சொந்த செலவுபோக தன்னிடமிருந்த மீதிப்பணம் ரூ.150/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதனைத்தொடர்ந்து ஆஜரிலிருந்த Date Entry Operator-கள் லதாமணி மற்றும்

கிரிஜா ஆகியோரிடம் பணம் பற்றி விசாரிக்க அவர்கள் 22.01.2024-ம் தேதி அலுவலகம் வரும்பொழுது முறையே ரூ.700/- மற்றும் ரூ.800/-ஐ கொண்டு வந்ததாக தெரிவித்து அவற்றை எடுத்து ஆஜர் செய்தார்கள். மேற்படி அலுவலர்களின் கையிருப்பு தொகை குறித்து தனிநபர் பண இருப்பு பதிவேட்டை சரிபார்த்து அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அங்கிருந்த இருவரைப்பற்றி விசாரிக்க அவர்களில் ஒருவர் தனது பெயர் சியாமளா என்றும் தான் கடந்த மூன்று வருடங்களாக தினக்கூலியாக இவ்வலுவலகத்தில் பணிபுரிந்துவருவதாக தெரிவித்தார். மற்றொருவரை விசாரிக்க தனது பெயர் சூரியா என்றும் தான் கோவை சிங்காநல்லூரிலுள்ள விஜயகுமார் என்ற ரியல் எஸ்டேட் புரோக்கருக்காக வில்லங்கம் போட்டுத்தரும் வேலை செய்து வருவதாகவும், பத்திரப்பதிவிற்கு கூட்டம் அதிகமாக இருக்கும் நாட்களில் தான் இவ்வலுவலகத்திற்கு டாக்குமெண்டிற்கான Endorsement வேலைகளை செய்து கொடுப்பதாகவும் அதற்காக வேலை செய்யும் நாளொன்றுக்கு ரூ.300/- சம்பளம் பெறுவதாகவும், அந்தவகையில் 22.01.2024-ம் தேதியும் இவ்வலுவலகத்தில் பத்திரப்பதிவிற்கு கூட்டம் அதிகமாக இருந்ததால் இங்கு வந்துள்ளதாகவும் தெரிவித்தார். தகவலின் பேரில் இவ்வலுவலகத்தில் ஆஜரான திரு.முகமது ஷெரீப் என்பவரிடம் ஆய்வுக் குழுவினர் அறிமுகப்படுத்திக்கொண்டபின்னர், அவரிடம் விசாரிக்க அவர் தான் அன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே கடந்த 7 வருடங்களாக பத்திர ஆபீஸ் வைத்து நடத்தி வருவதாகவும், தன்னுடன் பத்திர எழுத்தர் சந்தோஷ்குமார், Payment சதாம்உசேன், ஸ்டாம்ப் வெண்டர் விஸ்வநாதன் ஆகியோரும் வேலை செய்து வருவதாகவும் தெரிவித்தார். தான் ஒவ்வொரு பத்திரப்பதிவிற்கும் ரூ.1,000/- மாமூலாக அன்னூர் சார்பதிவாளர் அவர்களுக்கு அளிக்கவேண்டுமெனவும், அதை சார்பதிவாளரிடம் வேலைபார்த்துவரும் பிரபு என்பவர் தன்னிடம் வந்து வசூல் செய்வது வழக்கம் என்றும், அதேபோல் 22.01.2024-ம் தேதியில் தான் இரண்டு பத்திரத்தை பதிவு செய்ய கொடுத்ததற்காக ரூ.2,000/-ஐ அன்றைய தினம் மாலை சுமார் 6.30 மணியளவில் பிரபு வாங்கிச்சென்றதாகவும் தெரிவித்தார். மேலும் எனது டேபிள் டிராயரிலிருந்த ரூ.5,000/- மற்றும் ரூ.1150/- பற்றி விசாரித்தீர்கள். அந்தபணம் ரூ.5,000/- நான் பத்திரம் பதிவுசெய்ததற்கான

கட்டண தொகை என்றும், ரூ.1,150/- சதாம் உசேனுக்கு தர வேண்டிய கட்டண தொகை என்று தெரிவித்தேன். அந்த பணத்தை சதாம் உசேனிடமிருந்து பெற்றுக்கொண்டேன். மேலும் ஆஜரிலிருந்த திரு.மணி, த/பெ.முருகன் என்பவரை விசாரிக்க அவர் தனது சொந்த ஊர் மதுரை மாவட்டம், செல்லூர் என்றும் தான் தனது குடும்பத்துடன் தற்போது திண்டுக்கல் மாவட்டதில் வசித்து வருவதாகவும், தான் சார் பதிவாளர் திரு.செல்வபாலமுருகன் அவர்களுக்கு கடந்த 2012-ம் வருடம் முதல் அவ்வப்போது Acting Driver ஆக வேலை செய்ததாகவும், கடந்த 2021-ம் வருடம் முதல் சார்பதிவாளருடன் பெரியநாயக்கன்-பாளையத்தில் தங்கிக்கொண்டு, அவரது நிரந்தர ஓட்டுநராக வேலை செய்து வருவதாகவும், அதற்காக அவர் மாதம் ரூ.10,000/- சம்பளமாக கொடுத்து வருவதாகவும், வாராவாரம் தான் சார்பதிவாளரை அவரது சொந்த ஊரான கரூர் மாவட்டம் காந்தி கிராமத்திற்கு அழைத்துச்செல்வதாகவும், தான் மாதம் ஒரு முறை திண்டுக்கல் சென்று தனது அம்மா மற்றும் அண்ணன் ஆகியோரை பார்த்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் தனது பெயரில் 3 வங்கிக்கணக்கு உள்ளதாகவும், சார்பதிவாளர் அவ்வப்போது சில வங்கிகளின் அக்கவுண்ட் நம்பரைக் கொடுத்து பணம் போடச்சொல்வார் என்றும் அதன்படி தானும் அந்தந்த வங்கிகளில் சென்று பணம் டெபாசிட் செய்துவருவதாகவும், சார்பதிவாளர் அவர்களிடம் வேலைபார்க்கும் பிரபு என்பவர், சார்பதிவாளர் திரு.செல்வபாலமுருகன் அவர்கள் கொடுக்கச்சொன்னதாக சொல்லி நாங்கள் வீட்டிற்கு செல்லும் சமயத்தில் அடிக்கடி என்னிடம் பணம் தருவார் என்றும் நான் அதைப்பெற்று சார்பதிவாளரிடம் ரொக்கமாகவோ அல்லது அவர் சொல்லும் அக்கவுண்ட் நம்பர் அல்லது GPay நம்பருக்கு அனுப்பி வைப்பதாகவும், மேலும் பிரபு தன்னிடம் கொடுக்கும் பணத்தை சார்பதிவாளரின் செலவுக்கு பயன்படுத்தி அதன் விபரத்தை தனது Whats App Number 9655531008-லிருந்து சார்பதிவாளரது Whats App Number 9566389430- க்கு அனுப்புவார் என்றும் மேலும், சிலசமயம், சார்பதிவாளர் பிரபு மூலம் மாமூல் பணம் பெற்று அதை தன்னிடம் தருவார் எனவும் தான் அதனைப்பெற்று சார்பதிவாளரது காரில் வைத்துவிடுவதாகவும், சார்பதிவாளர் காருக்கு வந்ததும் அவரிடம் கொடுத்துவிடுவதாகவும் தெரிவித்தார். மேலும் ஆய்வுக்குழு ஆய்வாளர்

அவர்களது முன்னிலையில் மேற்படி காரை சோதனை செய்தபோது அதிலிருந்து விசாரணைக்காக எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் மேற்படி திரு.மணியின் Whats App Number 9655531008 மற்றும் சார்பதிவாளர் திரு.செல்வபாலமுருகன் அவர்களது Whats App Number 9566389430 ஆகியவைகளுக்கு இடையேயான பணிபரிவர்த்தனை தொடர்பான Chats சம்மந்தமாக Message-கள் பார்வையிடப்பட்டது. அவைகள் விசாரணைக்காக தேவைப்படுமெனக்கருதி அவைகள் அனைத்தும் Screen Shot எடுக்கப்பட்டு அதன் விபரங்களை பிரிண்ட் அவுட் எடுக்க இவ்வலுவலகத்தில் கலர் பிரிண்டர் இல்லாததால் ஆய்வுக்குழு ஆய்வாளர் முன்னிலையில் இவ்வலுவலகத்தின் எதிரே இருந்த ஷெரிப் என்பவரின் அலுவலகத்திலிருந்த கலர் பிரிண்டர் மூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டு, சார்பதிவாளர் மொபைல்போனின் Screen Shot பிரிண்ட் அவுட் (பக்கம் 1 முதல் 22 வரையில்) மற்றும் மேற்படி மணி மொபைல்போனின் Screen Shot பிரிண்ட் அவுட் (பக்கம் 1 முதல் 22 வரையில்) உள்ளதும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் 1).திரு.செல்வபாலமுருகன், சார்பதிவாளர், அன்னூர், கோவை, 2).திரு.பிரபு, த/பெ.பத்திரன், 27, காமராஜர் காலனி, நாகமாபுதூர், அன்னூர், கோவை, 3).திரு.சதாம்உசேன், த/பெ.நிஜாமுதீன், 1/43, ஒட்டர்பாளையம், அன்னூர், கோவை, 4).திரு.முகமது ஷெரீப், த/பெ.இலியாஸ், 11/25, எம்.ஜி.ஆர். வீதி, அன்னூர், கோவை, 5).திரு.மணி, த/பெ.முருகன், 6A, பெரியகோட்டை, M.M.கோவிலூர், திண்டுக்கல் மற்றும் 6) திரு.சந்தோஷ்குமார், த/பெ.ஆறுமுகம், 73, அல்லப்பாளையம், அன்னூர், கோவை ஆகியோர்களிடம் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளரால் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் சார்பதிவாளரிடம் 22.01.2024-ம் தேதியின்படி பதிவுசெய்யப்பட்ட பதிவுகளின் விபரத்தை கேட்க (1).Year 2024 Month January Account A Annur date From 22-Jan-2024 to 22-Jan-2024 (Page No.1 to 10), (2).Year 2024 Month January Account D Annur date From 22-Jan-2024 to 22-Jan-2024 (Page No.1 to 12), (3).Year 2024 Month January IP Camera / CD Account Annur date From 22-Jan-2024 to 22-Jan-2024 (Page No.1 to 6), (4).Birth / Death Cash Account

date From 22-Jan-2024 to 22-Jan-2024 (Page No.1 to 2) ஆகியவை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு சார்பதிவாளர் திரு.செல்வபாலமுருகன் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் (5).நிரந்தர முன் பணப்பதிவேடு 01.01.2024 (பக்கம்-1-4), (6).ஜனவரி மாத்திற்கான அலுவலக வருகை பதிவேடு (பக்கம்-1-8) (7).அலுவலகத்திலிருந்த தனி நபர் பணம் இருப்பு பதிவேடு (பக்கம்-1 to 18) மேற்படி பதிவேட்டின் கடைசி பக்கத்தை நகல் எடுக்கப்பட்டு சார்பதிவாளர் திரு.செல்வபாலமுருகன் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு மேற்படி அனைத்து ஆவணங்களும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் கொடிநாள் வசூல் குறித்து C கணக்கு பதிவேட்டை பார்வையிட்டபோது பதிவு எதுவும் காணப்படவில்லை. இந்த திடீர் தணிக்கை நடவடிக்கை ஆனது 22.01.2024-ம் தேதி இரவு 7.55 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 23.01.2024-ம் தேதி காலை 08.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையானது கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து கொண்டுவந்திருந்த அலுவலக மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அலுவலக பிரின்டரில் பிரின்ட் எடுக்கப்பட்டது. மேற்படி தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளை இத்துடன் இணைத்துள்ளேன். அதில் இந்த திடீர் ஆய்வு சம்மந்தமான அனைத்து விவரங்களையும், குறிப்பிட்டுள்ளேன். திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,32,000/-, திரு.பிரபு என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் பெறப்பட்டதற்கான குறிப்புச்சீட்டுகள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் சான்றொப்பம் பெற்ற ஆவணங்கள் மற்றும் திரு.செல்வபாலமுருகன், திரு.சந்தோஷ்குமார், திரு.சதாம் உசேன், திரு.ஷெரீப், திரு.பிரபு மற்றும் திரு.மணி ஆகியோரது வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். மேலும் 1).திரு.செல்வபாலமுருகன், சார்பதிவாளர், அன்னூர் சார்பதிவாளர் அலுவலகம், கோவை, 2).திரு.பிரபு, த/பெ.பத்திரன், 27, காமராஜர் காலனி, நாகமாபுதூர், அன்னூர், கோவை மற்றும் 3) திரு.மணி, த/பெ.முருகன், 6A, பெரியகோட்டை, M.M.கோவிலூர், திண்டுக்கல் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இணைப்பு: 1) நடவடிக்கை

குறிப்புகள், 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,32,000/-, 3) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் 1 முதல் 7 வரையிலானவை, 4) பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் 1 முதல் 6 வரையிலானவை, 5) இரண்டு குறிப்புச்சீட்டுகள் மற்றும் 6) சார்பதிவாளர் திரு.செல்வபாலமுருகன் மற்றும் அவரது ஓட்டுநர் மணி ஆகியோரின் மொபைல் போனிலிருந்து எடுக்கப்பட்ட Screen short-ன் பிரிண்ட் அவுட்கள். (Sdxxxx) மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர். Respected Madam, Received the complaint on 23.01.2024 at about 14.30 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.01/2024/AC/CB u/s. 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at about 15.00 hrs (Sd.xxxxxx) R.EZHILARASI, (23.01.2024) Inspr. of Police, VAC, CBE. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுக்குழு ஆய்வாளர் அவர்களால் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

23/01/2024

(R.எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.